# செய்தி மடல்

**NEWSLETTER - JUNE 2011**

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ் Tamil Study Centre, Homebush Inc.
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

## அரையாண்டுப் பரீட்சை - 18.06.2011

வழமைபோல் இம்முறை அரையாண்டுப் பரீட்சை 18.06.2011 அன்று பாடசாலை நேரத்தில் அனைத்து வகுப்புகளுக்கும் இடம்பெறும் என அறியத்தருகின்றோம். 2009ம் ஆண்டில் நடைபெற்ற அரையாண்டுப் பரீட்சைக்கான வினாத்தாள்களை மாணவர்களின் பயிற்சிக்காக எமது கல்வி நிலைய இணையத் தளத்தில் கொடுத்துள்ளோம் என்பதனை அறியத்தர விரும்புகின்றோம்.

## தமிழ் அறிவுப்போட்டிக்கான பரிசளிப்பு தினம் - 02.07.2011

இம்முறை இடம்பெற்ற தமிழ் அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 2ம் திகதி ஜூலை மாதம் பி.ப 2:00 மணிக்கு நடைபெறும். பாடசாலைக் கட்டணத்தை ஒருவருடத்திற்கும் மேலாக செலுத்தத்தவறிய மாணவர்களுக்கு பரிசுகள் கிடைக்கும் தருணத்தில் அவர்களுக்கு சான்றிதழ்கள் மட்டுமே வழங்கப்படும் என முன்கூட்டியே அறியத்தருகின்றோம். உங்களால் இயன்றவரை கல்வி நிலையத்திற்கு ஆதரவு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

## பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு - 02.07.2011 இரண்டாம் தவணை நிறைவு நாள்

இரண்டாம் தவணை விடுமுறை தினத்தன்று பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு இடம்பெறும். அத்துடன் மாணவர்களின் அரையாண்டுக்கான அறிக்கையும் வழங்கப்படும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் பெறுபேறுகளை ஆசிரியர்களுடன் கேட்டுஅறிந்து கொள்ளலாம். வகுப்பாசிரியர்களை சந்திக்க விரும்பும் பெற்றோர்கள், தயவுசெய்து ஆசிரியர்களிடம் முன்கூட்டியே நேரத்தைப் பதிவு செய்யவும்.

## COMMUNITY LANGUAGES SHORT FILM COMPETITION – 2011

NSW Federation of Community Language Schools

இம்முறை NSW Federation of Community Language Schools இரண்டு நிமிடங்களுக்கு மேற்படாதவாறு ஒரு சிறிய திரைப்படம் ஒன்றைத் தயாரிக்கும் போட்டிக்கான தலைப்பை (Theme) தந்துள்ளார்கள்:

Theme for the Competition: *"**Welcome**"*

இதற்கான முழுவிபரங்களையும் நாம் முன்கூட்டியே உங்களுக்கு தந்துள்ளோம். ஆக்கங்கள் அனைத்தும் தரப்பட்டுள்ள வயதெல்லைக்குள் குழுவாக **26.06.2011** க்கு முன்பாக உங்கள் வகுப்பு ஆசிரியரிடமோ அல்லது செயலாளரிடமோ கையளிக்கப்படவேண்டும். தயவுசெய்து உங்கள் விபரங்களையும், போட்டி விபரங்களையும் முன்தரப்பட்ட விபரக்கொத்தில் குறிப்பிட்டது போல் தெளிவாகப் பதிக்கவும்.

## அமைச்சர் விருது தெரிவு

எமது கல்வி நிலையத்தின் சிறந்தமாணவர் விருதைப்பெற்ற செல்வி அபிராமி ரவீந்திரன் (மேற்பிரிவு), செல்வி கேசவி விக்னராஜா (கீழ்ப்பிரிவு) ஆகிய இருவரும், 2011ம் ஆண்டு அமைச்சர் விருதின் தெரிவிற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். அமைச்சர் விருது வைபவம் 05.09.2011 அன்று University of New South Wales இல் இடம்பெறவுள்ளது.

மேலதிகவிபரங்கள்:
https://www.det.nsw.edu.au/what-we-offer/awards-scholarships-and-grants/awards/student-achievement-community-languages

## பாடற்குழு

எமது கல்வி நிலைய பாடல் குழுவினர் அண்மையில் இடம்பெற்ற சிட்னி தமிழ் அறிவகம் நடாத்திய "வசந்தமாலை", "கொடிதினம்" நிகழ்ச்சிகளில் பங்குபற்றி தமிழ்மொழி வாழ்த்தினையும், தேசிய கீதத்தினையும் பாடினார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## கொடிதினம் 2011 – சிட்னி தமிழ் அறிவகம்

சிட்னி தமிழ் அறிவகம், யாழ் பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்ட தினத்தை நினைவு கூர்ந்து 04.06.2011 அன்று நடாத்திய கொடிதின நிகழ்வில் எமது கல்விநிலைய மாணவர்கள், செல்வி ஜினோதா லோகேந்திரன் தலைமையில் **"கற்றதும் பெற்றதும்"** எனும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்றில் பங்குபற்றி அனைவரின் பாராட்டைப் பெற்றார்கள். இதில் பங்குகொண்ட மாணவர்கள் செல்விகள் அஷ்வீனா சிற்சபேசன், ஹெலென் அசோகன், பார்கவி மோகனசுந்தரம், கஸ்தூரி முருகவேல், தக்ஷினா ராஜேந்திரன், பிரணவி இராஜசிங்கம், தேவிகிருஷ்ணா தேவேந்திரன், விதுஷனா சத்திரசேகர், ஜனனி குலராஜா மற்றும் செல்வன் ஜனாத்தன் குமரகுரபரன், செல்வன் ஆதித்தன் திருநந்தகுமார். மேலும் இந்நிகழ்ச்சியில் எமது பாடசாலைப் **பாடற்குழு** தமிழ்மொழி வாழ்த்தினைப் பாடி நிகழ்ச்சியை ஆரப்பித்துவைத்து சிறப்பித்தார்கள்.

## மாணவர்களின் விபரங்கள்

மாணவர்களின் விபரங்கள் எமது தரவுத்தளத்தில் சரியாக இருந்தால் மட்டுமே நாம் உங்களுடன் அவசியநேரத்தில் தொடர்பு கொள்ளக்கூடியதாக இருக்கும். அத்துடன் சான்றிதழ்களில் மாணவர்களின் பெயரை சரியாக எழுதவும், அரசாங்க மானியத்திற்கு விண்ணப்பிக்கவும் உதவியாக இருக்கும். இதனால் நீங்கள் உங்கள் பிள்ளைகளின் விபரங்களை இணையத் தளத்திற்குச் சென்று பூர்த்திசெய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## பாடசாலைக் கட்டணம்

தமிழ்க் கல்வி நிலையத்தின் அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அரசாங்கம் தரும் பணத்தை விட அதிகமாகத் தேவைப் படுவதால், பெற்றோர்கள் தயவு செய்து பாடசாலைக் கட்டணத்தை முன்கூட்டியே செலுத்துமாறு நிர்வாகக் குழுவினர் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றனர்.

| ஒரு குடும்பத்தில்<br>Preschool - Year 9 | மாதம் | தவணை | வருடம் |
|---|---|---|---|
| ஒரு மாணவருக்கு | $5 | $15 | $50 |
| இரு மாணவருக்கு | $8 | $24 | $80 |
| மூவரும், மேற்பட்டோர் | $10 | $30 | $100 |
| Year 10 - Year 12 (per student) | $10 | $30 | $100 |

## பாடசாலை நேரம்

| Class | Start Time | Finish Time | Break Time |
|---|---|---|---|
| **Morning Session** | | | |
| Year 11 & 12 | 10:30am | 2:00pm | 12:15 - 12:30pm |
| Year 10 | 10:30am | 1:30pm | 12:00 - 12:15pm |
| Year 7, 8 & 9 | 10:30am | 1:00pm | 11:45 - 12:00pm |
| **Evening Session** | | | |
| Year 1 - 6 | 2:00pm | 4:30pm | 3:15 - 3:30pm |
| Year PS & KG | 2:00pm | 4:30pm | 3:00 - 3:15pm |

பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்திற்குப் பின் தாமதமாக வரும் மாணவர்களும், பாடசாலை முடியும் நேரத்திற்கு முன் வீடுசெல்ல விரும்பும் மாணவர்களும் பெற்றோரினால் பூர்த்திசெய்து விண்ணப்பப்படிவத்தினை நிர்வாகக்குழுவினரிடம் ஒப்படைத்தல் வேண்டும். இதனால் நாம் உங்கள் பிள்ளைகளின் பாதுகாப்புக்கு உதவி செய்யக் கூடியதாக இருக்கும். விண்ணப்பப் படிவத்தை நீங்கள் எமது இணையத்தளத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

## ஞாயிறு தமிழ்ப் பாடசாலை

பல்கலைக் கழகங்களில் படிக்கும் மாணவர்களுக்கும், பாடசாலைப் படிப்பை முடித்தவர்களுக்கும், மற்றும் வளர்ந்தவர்களுக்கும், ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை தமிழ்ப் பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது. இதனால் இளைஞர்கள் தமிழை கற்பதற்கு மிகவும் வசதியாக உள்ளது. மேலதிக விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**இரண்டாம் தவணை நிறைவு – 02.07.2011**
**மூன்றாம் தவணை ஆரம்பம் – 23.07.2011**

## முக்கிய தினங்கள்

23.07.11 – 3ம் தவணை ஆரம்பம்
06.08.11 – கேட்டுக்கிரகித்தல் பரீட்சை 2
20.08.11 – உரையாடல் பரீட்சை 2
03.09.11 – பேச்சுப்போட்டி (PreSchool – Y6)
10.09.11 – பேச்சுப்போட்டி (Y7 – Y11)
24.09.11 – பேச்சுப்போட்டி பரிசளிப்பு தினம்
24.09.11 – 3ம் தவணை நிறைவு நாள்
01.10.11 – வாணி விழா 2011*
15.10.11 – 4ம் தவணை ஆரம்பம்

*வாணிவிழா இம்முறை பாடசாலை விடுமுறை நாட்களில் வருவதால் காலை 9:00 மணிக்கு ஆரம்பமாகும்




2010ம் ஆண்டு சிறந்தமாணவர்களுடன் அதிபர்



Strathfield MP with Homebush Tamil Study Centre Management Committee at KalaiVizha2011

எமது கல்வி நிலைய இணையத்தளம் multimedia வசதிகளைக் கொண்ட ஒருஇணையத்தளமாக வலுப்பெற்றுள்ளது. இதனால் நாம் மாணவர்களின் தரமான ஆக்கங்களை அனுமதியுடன் video, audio வடிவத்திலும் இணைத்துள்ளோம்.

Please visit our website

**www.tsch.org.au**

email

**info@tsch.org.au**